பக்கங்கள் 18+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 05 சனிக்கிழமை 20.12.2025 | அதிர்வு 143

## 206 மில்லியன் டொலர் நிதியுதவி இலங்கைக்கு

### சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல்

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை, இலங்கைக்கு அவசரகால நிதியுதவியை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


# செவ்வாய் வருகிறார் ஜெய்சங்கர்

### தமிழரசு - சங்கு கூட்டணியுடன் சந்திப்பு

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் வரும் 23ஆம் திகதி செவ்வாயன்று ஒரு நாள் விஜயமாக கொழும்பு வருகிறார்.

இலங்கைத் தலைவர்களை சந்தித்துப் பேசும் அவர் கொழும்பில் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (சங்குக் கூட்டணி) ஆகிய தரப்பினரை ஒன்றாகச் சந்திக்கவிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

02



# ஆலய வழிபாட்டுக்காக அர்ச்சனைப் பொருட்களுடன் மோ. சைக்கிளில் மகளுடன் வந்த தாய் விபத்தில் சாவு!

### யாழ்ப்பாணத்தில் இன்று துயரம்



(எஸ்.நிதர்ஷன்)

மோட்டார் சைக்கிளில் தனது மகளுடன் ஆலய வழிபாட்டுக்குச் சென்ற தாயார் விபத்தில் சிக்கி மகளின் கண் முன்னே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், மூளாய் பகுதியைச் சேர்ந்த எஸ். வரதராணி (வயது 64) என்பவரே உயிரிழந்துள்ளார்.

02

20ஆவது வருடத்தில் Tamil one TV

Voice of Tamil Canadians

ஒன்றாக முன்னோக்கி

Tamil one TVஇன் பயணத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கிவரும் அனைவருக்கும் நன்றி

அடுத்த தசாப்தத்திற்கான பயணத்தில் ஊடகப் பங்காளர்களாக,

கல்வி | வறுமை ஒழிப்பு | பொருளாதாரம் | அரசியல் | விளையாட்டு | கலை | கலாசாரம்

என்பவற்றில் 'ஒன்றாக முன்னோக்கி' செல்ல நாம் ஒன்றிணைவோம்.

Vision 2030- ஒன்றாக முன்னோக்கி

# தையிட்டி விகாரைக்கு முன்பாக நாளை எதிர்ப்புப் போராட்டம்!

## தேசிய மக்கள் சக்தியினரும் இணைகின்றனர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக அடாத்தாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவிக்குமாறும், விகாரையின் விகாராதிபதிக்கு வழங்கப்படும் கௌரவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாளை ஞாயிற்றுக்கிழமை விகாரை முன்பாகப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு முன்பாக காலை 9 மணிக்கு இந்தப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது என்று வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின் தோட்டை நந்தாராம தேரருக்கு வழங்கப்படவுள்ள அமரபுர ஸ்ரீகல்யான வம்ச குழுவின் வட இலங்கைத் துணைத் தலைமை சங்கநாயக




பதவிக்கான ஸ்ரீ சன்னாஸ் சான்றிதழ் மற்றும் விஜின் சான்றிதழ் வழங்கும் விழா நாளை புத்தசாசன சமயம் மற்றும் கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனெவி தலைமையில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தையிட்டி விகாரைக்கு முன்பாக 'இதொரு சட்டவிரோதமான விகாரை' என மும்மொழிகளில் அறிவித்தல் பலகை நாட்டுவது எனவும், விகாராதிபதிக்கு வழங்கப்படவுள்ள கௌரவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை போராட்டம் முன்னெடுப்பது என்றும் கடந்த வியாழக்கிழமை வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் தேசிய மக்கள் சக்தியின் பூரண ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 2026 மில்லியன்...

இதன் மூலம் 'விரைவான நிதியளிப்பு கருவி'யின் கீழ், சுமார் 206 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை உடனடியாகப் பெற்றுக்கொள்ளும் வசதி இலங்கைக்குக் கிடைத்துள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

### செவ்வாய் வருகிறார்...

பேரிடரால் பெரிதும் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உடனடி அயல்நாடு என்ற முறையில் பெருமளவில் விரைந்தும், தொடர்ந்தும் இந்தியா உதவி வரும் பின்னணியில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஒரு நாள் விஜயமாகக் கொழும்பு வருகின்றார்.

ஏற்கனவே கடந்த ஏப்ரலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கொழும்பு வந்திருந்த சமயம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நான்கு தலைவர்களையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இரண்டு தலைவர்களையும் சேர்த்து ஒன்றாகச் சந்தித்திருந்தார்.

அந்தச் சந்திப்பின் தொடர்ச்சி இப்போது இந்திய வெளிவிவகார அமைச்சரின் கொழும்பு விஜயத்தின் போதும் தொடர்ந்து இடம்பெறும் எனத் தெரிகிறது.

பிரதமர் மோடியைச் சந்தித்த தமிழரசுக் கட்சி பிரமுகர்களான கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், செயலாளர் எம்.எ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் செவ்வாயன்று இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்திப்பர் என்று தெரிகின்றது.

சங்கு கூட்டணியின் சார்பில் இரண்டு தலைவர்கள் முன்னர் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பில் பங்கு பற்றியிருந்தனர். இந்தத் தடவையும் அவர்கள் சார்பில் இருவர் இந்த பேச்சுக்களில் பங்கு பற்றுவர் என்று தெரிகிறது.

ஏற்கனவே இதே 23ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், சங்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஐந்து கட்சிகளின் தலைவர்களுமாகச் சேர்ந்து இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆயினும் இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகையையொட்டி அந்தச் சந்திப்பு தள்ளிப் போய் இருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் ஒரு நாள் கொழும்பு விஜய விவரங்கள் நாளை அளவில் உறுதியாக வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் இந்த விஜயத்தின் போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அல்லது தமிழ் மக்கள் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகளை இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்திப்பதற்கான வாய்ப்புகள் இல்லை எனத் தெரிய வந்தது.

இலங்கையில் ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் மாத இறுதியில் புதுடில்லி செல்கின்றார் என்று கூறப்படும் பின்னணியில் அதற்கு முன்னதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கொழும்பு வருகை தந்து இலங்கைத் தலைவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### ஆலய...

மூளாய் பகுதியைச் சேர்ந்த தாயும் மகளும் யாழ்ப்பாணம் நகர் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் பூஜையில் கலந்துகொள்ள மோட்டார் சைக்கிளில் அர்ச்சனைப் பொருட்களுடன் இன்று வந்துள்ளனர்.

எதிர்த்திசையில் வந்த கழிவகற்றும் வாகனத்தை முந்திக்கொண்டு வந்த மோட்டார் சைக்கிளால் தாயும் மகளும் பயணித்த மோட்டார் சைக்கிளில் நிலை குலைந்தது, வீதியில் இருவரும் மோட்டார் சைக்கிளுடன் வாழ்ந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த தாயார் வீதியின் நடுப்பகுதியில் வீழ்ந்ததுடன், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த மகள் வீதியின் மறுபக்கம் வீழ்ந்துள்ளனர்.

அதன்போது, வீதியின் எதிர்த்திசையில் வந்த கழிவகற்றும் வாகனம் தாயார் மீது மோதியதில் தாயார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மகளை அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த யாழ்ப்பாணம் பொலிஸார், கழிவகற்றும் வாகனத்தின் சாரதியைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு!

(க.மகாதேவன்)



அனுராதபுரம், தம்புத்தேகம, மலியதேவபுர பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி நபர் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவர் தனது விவசாய நிலத்தில் இருந்தபோதே இவ்வாறு காட்டு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் மலிய தேவபுர பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

தனது வயலுக்கு வரும் காட்டு யானைகளை விரட்டுவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை மாலை இரண்டு நண்பர்களுடன் வயல்வெளிக்கு அருகிலுள்ள வீதியின் மதகு ஒன்றுக்கு அருகில் இருந்தபோதே, அங்கு வந்த காட்டு யானை அவரைத் தாக்கியுள்ளது.

அவருடன் இருந்த இரண்டு நண்பர்களும் மதகுக்குக் கீழே குதித்து உயிர் தப்பித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் யானையிடமிருந்து தப்புவதற்காக வீதியில் ஓடிய போதிலும், அவரைத் துரத்திச் சென்று யானை தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தம்புத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 15 வயது மாணவி தீயில் எரிந்து சாவு!



## வடமராட்சியில் சம்பவம்


யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறை – கொம்மாந்துறைப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் தீயில் எரிந்து சாவடைந்துள்ளார்.

15 வயதான பார்த்தீபன் கபிஷ்னா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறு தொடர்பில் வீட்டில் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து, அந்த மாணவி தனக்குத் தானே தீவைத்துள்ளார்.

இதையடுத்து, ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.



# மின்சார வேலியில் சிக்கி இளைஞர் ஒருவர் மரணம்!

மின்சார வேலியில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அம்பாறை, தெஹியத்தகண்டிய – உத்தலபுர பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கலேன்பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் என்று தெரியவந்துள்ளது.

இவர் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காகச் சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

தெஹியத்தகண்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வெளிநாட்டுப் பிரஜை கடலில் மூழ்கி மரணம்!

கடலில் மூழ்கி வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹிக்கடுவை – வேவல பகுதியில் உள்ள கடலில் மூழ்கியே மேற்படி நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 54 வயதான பெலாருஸ் நாட்டைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த நபர் நேற்று வெள்ளிக்கிழமை ஹிக்கடுவை கடலில் நீராடிக்கொண்டிருந்த போது திடீரென கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் பிரதேச வாசிகள் மற்றும் பொலிஸ் உயிர்காப்பு அதிகாரிகளால் மீட்கப்பட்டு பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் பலப்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹிக்கடுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வெள்ள அனர்த்தம் காரணமாக வீதியோரத்தில் தரப்பால் கொட்டகைக்குள் வசிக்கும் கிராமம்

## செட்டிகுளம் பீடியாபாம் மக்களின் கண்ணீர்க் கோரிக்கை

(கி.வசந்தன்)

டித்வா புயலினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக வீடுகளை விட்டு வீதியோரத்தில் தரப்பால் கொட்டகைக்குள் செட்டிகுளம், பீடியாபாம் மக்கள் தொடர்ந்தும் வசித்து வருகின்றனர்.

வவுனியா,செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஒரு கிராமமே பீடியாபாம்.

மல்வத்து ஓயா நீர் பாய்ந்து செல்லும் பாதை அருகே இக்கிராமம் அமைந்துள்ளமையால் அந்த நீர் பெருக்கெடுத்து தாண்டவம் ஆடியமையால் அம்மக்களின் வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள் மணல் மேடுகளாகக் காட்சியளிக்கின்றன.

இதனால் 17 குடும்பங்களைச் சேர்ந்த 59 பேர் இவ்வாறு எது வித அடிப்படை வசதியும் இன்றி தற்காலிக தரப்பால் கொட்டகைக்குள் வசித்து வருகின்றனர்.

1975 ஆம் ஆண்டு படித்த வாலிபர் திட்டத்தின் கீழ் இந்தக் கிராமம் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அண்மையில் இடம்பெற்ற அனர்த்தத்தால் கிராமமே நீரில் மூழ்கியதுடன், மக்களின் உடமைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

வீடுகள் பல முற்றாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

வயல்களும் முழுமையாக அழிவடைந்துள்ளமையுடன், அவர்களின் வாழ்வாதாரத்திற்கான கால்நடைகளும் இறந்துள்ளன.

இந்நிலையில் இவ்வாறான வெள்ள அனர்த்ததால் தொடர்ந்தும் தமது உயிரையும் உடமையையும் பாதுகாக்க முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ள இம்மக்கள், தங்களிற்கு வேறு ஒரு பாதுகாப்பான இடத்தில் காணியினை தந்துதவுமாறு கோருகின்றனர்.

இந்நிலையில், கடந்த வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் இந்தக் கிராம மக்களை பாதுகாப்பான ஓர் இடத்தில் குடியமர்த்துவதற்கு ஏற்ற வகையில் இடத்தைத் தெரிவு செய்யுமாறு தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.













நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இதுவும் முறைகேடுதான்

கண்ணுக்குத் தெரியாத நூதனமான சுற்றறிக்கைகள் மூலம் தேசிய மக்கள் சக்தி இன்னுமொரு மிகப்பெரிய இனப்படுகொலை மற்றும் இன வழிப்பை நாட்டில் செய்வதற்கு முயற்சிக்கின்றது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் எஸ்.சிறீதரன் நாடாளுமன்றத்தில் காட்டமாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றார். பேரிடரின் பின் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இந்தக் குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார்.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் மற்றும் அதற்கு பின்னரான நிலைமைகள் மக்களை பெருமளவில் பாதித்துள்ள பின்னணியில் மிக நுணுக்கமான முறையில் மக்கள் பிரதிநிதிகளை புறமொதுக்கி, அடாத்துப் பண்ணும் வேலையை ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி முன்னெடுப்பதாக அவர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

கடந்த அறுபது ஆண்டுகளாக தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சி வரிசைகளில் இருந்து, பின்னர் இப்போதுதான் தேர்தல் மூலம் அதிகாரத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.

அப்படி தெரிவு செய்யப்பட்ட அந்த ஆட்சி பீடம் நாடாளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் போன்றவற்றுக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட எதிரணிப் பிரதிநிதிகளை புறமொதுக்கி, ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்படும் சுற்று நிருபம் மூலம் நாட்டை நிர்வகிக்கும் நடவடிக்கையை மேற்கொள்கின்றது என ஏனைய எதிர்க்கட்சி எம்.பிக்கள் போன்று சிறிதரனும் சபையில் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

நாட்டில் நடைபெறுவது அரசாங்கத்தின் ஜனநாயக நடைமுறைகளா அல்லது தேசிய மக்கள் சக்தியின் அராஜகமா என்று அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

ஜனாதிபதி செயலகம் விடுக்கும் சுற்று நிருபங்களுக்கு அமைய, பிரஜாசக்தி வறுமை ஒழிப்பு தேசிய இயக்கமானது பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை ஒதுக்கி அவர்களின் செயற்பாட்டை கேள்விக்குட்படுத்தியுள்ளது.

இந்த நாட்டில் பிரதேச ரீதியில் - மாவட்ட ரீதியில் - ஆளும் கட்சியின் உறுப்பினர்களே ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கே விசேட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம், அவர்களும் தமது ஆளும் கட்சிப் பிரதிநிதிகள் மட்டும் - அதுவும் மக்களால் பிரதேச ரீதியில் தேர்தல்களில் நிராகரிக்கப்பட்டவர்கள் - அதிகார விடயங்களை கையாளவும், மறுபுறத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட - ஆளுங் கட்சியினர் அல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் போன்றவர்கள் அரசியல் செயற்பாடு அற்றவர்களாக மாற்றப்படவும் வழி ஏற்படுத்தி வருகின்றார்கள். இப்போதைய தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் நிர்வாக முறைமையின் கீழ் இது நாசூக்காக முன்னெடுக்கப்படுகின்றது.

இது ஜனநாயக விரோதமான செயல் என்று நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டிய சிறிதரன், அரசு உண்மை நீதி, நியாயத்துடன், கௌரவமான அரசியல் பாரம்பரியத்தை முன்னெடுக்க வேண்டும் என்று கோரி இருக்கிறார்.

ஆனால் அந்தக் கோரிக்கை எல்லையற்ற நாடாளுமன்ற வலிமையுடனும் நிறைவேற்றதிகாரப் பலத்துடனும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்து, முழு அதிகாரத்தையும் கைகளில் வைத்துக்கொண்டு அதிகார மிடுக்குடன் செயல்படும் அநுரகுமார திஸநாயக்க அரசின் காதுகளில் ஏறுமா என்பது கேள்விக்குறியே.

முன்னைய அரசுகளையும் ஆட்சி முறைகளையும் குறை கூறிக் கொண்டிருக்கும் அநுரகுமார அரசு, மக்களால் தெரிவு செய்யப்பட்ட எதிரணிப் பிரமுகர்களை ஒதுக்கிவிட்டு, மக்களால் நிராகரிக்கப்பட்ட தமது கட்சியின் அல்லக்கைகளுக்கு பிராந்திய, பிரதேச ரீதியில் அரச அதிகாரங்களையும் பொறுப்புகளையும் ஒப்படைப்பது இன்னொரு முறைகேடான அரசியல் நிர்வாகம்தான். இதுவும் ஊழல் வகையறாக்குள் கணக்கிடப்பட வேண்டிய ஒன்றுதான்.

# 20 ஆவது வருடத்தில்

# Tamil one TV

*Voice of Tamil Canadians*

# ஒன்றாக முன்னோக்கி

Tamil one TVஇன் பயணத்திற்கு தொடர்ந்து
ஆதரவு வழங்கிவரும் அனைவருக்கும் நன்றி

அடுத்த தசாப்தத்திற்கான பயணத்தில் ஊடக பங்காளர்களாக,

கல்வி | வறுமை ஒழிப்பு | பொருளாதாரம்

அரசியல் | விளையாட்டு | கலை | கலாசாரம்

என்பவற்றில் 'ஒன்றாக முன்னோக்கி' செல்ல நாம் ஒன்றிணைவோம்.

## Vision 2030- ஒன்றாக முன்னோக்கி

# கார்ட்டூன்களின் வண்ண உலகம் சிறுவர் மனம் மாறும் நிஜ உலகம்!



அப்துல் அஸீஸ் அஸ்மா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

வண்ணங்களால் உயிர்ப்பெறும் கார்ட்டூன் உலகம் சிறுவர்களுக்கு சிரிப்பையும் கனவையும் அளிப்பதோடு, அவர்களின் சிந்தனையும் நடத்தையையும் அமைதியாக மாற்றி விடுகிறது. சின்னத்திரையில் தோன்றும் கற்பனைப் பாத்திரங்கள், இன்றைய சிறுவர்களின் நிஜ வாழ்வின் முன்மாதிரிகளாக மாறியிருப்பதே சமூகத்தின் புதிய நிஜம்.

அந்த வகையில்,நவீன ஊடக உலகில் கார்ட்டூன்கள் சிறுவர்களின் அன்றாட வாழ்வின் பிரிக்க முடியாத அங்கமாக மாறிவிட்டன. ஒரு காலத்தில் மாலை நேரங்களில் தொலைக்காட்சியில் மட்டுமே காணப்பட்ட கார்ட்டூன்கள் இன்று மொபைல், யூடியூப், நெட்ஃபிளிக்ஸ், கார்ட்டூன் நெட்வொர்க் போன்ற பல தளங்களில் எப்போதும் எங்கும் கிடைக்கும் அளவுக்கு விரிவடைந்துள்ளன. இதனால், சிறுவர்கள் கார்ட்டூன்களை ஒரு பொழுதுபோக்கு ஊடகமாக மட்டும் அல்லாது, ஒரு வாழ்க்கைமுறையாகவும் காணத் தொடங்கியுள்ளனர். கார்ட்டூன்களில் காட்டப்படும் கதாபாத்திரங்கள், அவர்களின் பேச்சு முறை, உடை, போர், கோபம், வெற்றி ஆகிய அனைத்தும் குழந்தைகளின் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக 5 முதல் 12 வயது வரையிலான குழந்தைகள் பின்பற்றும் மனநிலை வடிவமைப்பில் கார்ட்டூன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது பல ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான கார்ட்டூன்கள் கற்பனை உலகத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. இந்த கற்பனை உலகில் நல்லது எப்போதும் வெல்லும் என்ற ஒரு உந்துதல் இருப்பதோடு, அதனை அடைவதற்காக கதாபாத்திரங்கள் மேற்கொள்ளும். வன்முறைச் சயல்கள், சண்டை, கத்தல், நகைச்சுவை என்ற பெயரில் இடம்பெறும் இழிவூட்டும் நிகழ்வுகள் போன்றவை குழந்தைகளின் நெறிமுறைக் கற்பனையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, Tom and Jerry என்ற கார்ட்டூன் தொடரில் ஜெர்ரி எலி தன்னைவிட பெரிய டாமைப் பலவிதமாக ஏமாற்றி துன்புறுத்துகிறது. இதனால் குழந்தைகள் தங்கள் தோழர்களிடையே ஜெர்ரியைப் போல நகைச்சுவையுடன் பழிவாங்குவது சரிதான் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்கின்றனர். இதேபோல Shinchan என்ற ஜப்பானிய கார்ட்டூன் தொடரில் உள்ள கதாபாத்திரமான ஷின்சான் தன் பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் மரியாதையற்ற விதத்தில் பேசுவதைப் பல குழந்தைகள் பின்பற்றுகின்றனர்.

பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் “எங்கள் பிள்ளை இப்போது நம்மிடம் கார்ட்டூன் கதாபாத்திரம் போல பேசுகிறது” என ஆச்சரியத்துடன் கூறுவதும் இதனால் தான். கார்ட்டூன்களில் காணப்படும் நடத்தைப் பிரதிகள் சிறுவர்களின் சமூக தொடர்புகள் மற்றும் உணர்ச்சிச் செயல்பாடுகளிலும் மெல்ல மாறுதல்களை உண்டாக்குகின்றன. Ben 10 அல்லது Dragon Ball Z போன்ற கார்ட்டூன்கள் சிறுவர்களுக்கு தங்கள் உடல் வலிமையால் அனைத்தையும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்குகின்றன.

இதனால் அவர்கள் பள்ளி விளையாட்டுகளில் அல்லது நண்பர்களுடன் விளையாடும் பொழுதுகளில் வன்முறை மற்றும் கடுமையான போட்டி மனப்பான்மையை வெளிப்படுத்துகின்றனர். இதேபோல் Power Rangers, Naruto போன்ற தொடர்களில் காணப்படும் வேட்கை நிறைந்த போர் காட்சிகள் குழந்தைகளின் மனதில் அதிரடியை விரும்பும் இயல்பை அதிகரிக்கின்றன.

பல மருத்துவர்கள் இது தொடர்பில் குறிப்பிட்டதாவது, கார்ட்டூன்களில் வன்முறை தொடர்ந்து பார்ப்பது குழந்தைகளின் மூளைச் செயல்பாடுகளில் தற்காலிக அதிர்வை ஏற்படுத்தி, அவர்கள் நிதானமாக சிந்திப்பதற்கான திறனை குறைக்கக்கூடும் என்பதே.

இதை ஒப்பிடும்போது, சில கார்ட்டூன்கள் குழந்தைகளின் சிந்தனை திறனை வளர்க்கவும், நல்ல பழக்கவழக்கங்களை ஊக்குவிக்கவும் பெரும் பங்கு வகிக்கின்றன. Dora the Explorer அல்லது Chhota Bheem போன்ற கார்ட்டூன்கள் குழந்தைகளுக்கு புதிர் தீர்க்கும் திறன், அன்பு, உதவி மனப்பான்மை, தன்னம்பிக்கை போன்ற நற்செயல்பாடுகளைக் கற்றுத் தருகின்றன. ஆனால், பெற்றோர்கள் இதனை வழிநடத்தாமல் விட்டால் குழந்தைகள் இதிலிருந்து வன்முறை சார்ந்த அம்சங்களை மட்டுமே எடுத்துக்கொள்ளும் அபாயமும் உண்டு. உதாரணமாக Chhota Bheem கார்ட்டூனில் பீம் தனது எதிரிகளை அடித்து வீழ்த்துவது குழந்தைகளுக்கு வன்முறை மூலம் வெற்றியை அடைவது இயல்பு என்று உணர்த்துகிறது. இதேபோல் Pokémon தொடரில் ஆஷ் மற்றும் பிகாசு இடையேயான உறவு நண்பர்கள் இடையே நெருக்கத்தை ஊக்குவித்தாலும், அதிலுள்ள போட்டி மனப்பான்மை மற்றும் ‘எப்போதும் ஜெயிக்க வேண்டும்’ என்ற அழுத்தம் சில குழந்தைகளின் மனநிலையை பாதிக்கக் கூடும்.

சிறுவர்களின் வளர்ச்சியில் கார்ட்டூன்களின் தாக்கம் மிக நுட்பமானது. குழந்தைகள் ஒரு கதாபாத்திரத்தை பின்பற்றுவது வெறும் விளையாட்டாகத் தோன்றினாலும், அது அவர்களின் அடையாளத்தையும் சுய உணர்வையும் வடிவமைக்கக் கூடியதாகும்.

உதாரணமாக, Spider-Man அல்லது Superman போன்ற சூப்பர் ஹீரோ கதாபாத்திரங்களை சிறுவர்கள் தங்களைப் போலவே கற்பனை செய்து ‘நான் யாருக்காவது உதவ முடியும்’ என்ற உந்துதலைப் பெறுகின்றனர். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் உண்மையான உலகில் அதே வலிமையோ அல்லது சக்தியோ இல்லாதது உணரும்போது விரக்தி, மனச்சோர்வு போன்ற உணர்வுகளும் உருவாகலாம்.

குழந்தைகளின் மனநல ஆலோசகர் டாக்டர் ஜயந்தி பெர்னான்டோ கூறுவதாவது, “குழந்தைகள் தங்களை கார்ட்டூன் கதாபாத்திரங்களுடன் ஒப்பிட்டு, நிஜ வாழ்க்கையில் அதே ரீதியான ஆற்றல் இல்லாதபோது தாழ்வுணர்வு ஏற்பட வாய்ப்பு அதிகம்” என்பதாகும்.

மனநல நிபுணர்கள் பலரும் இதே கருத்தையே வலியுறுத்துகின்றனர். டாக்டர் முஹம்மது ஸைது அவர்கள், “சிறுவர்கள் தினமும் இரண்டு மணித்தி

தொடர்ச்சி...



# கார்ட்டூன்களின் வண்ண உலகம் சிறுவர் மனம் மாறும் நிஜ உலகம்!

தொடர்ச்சி...

யாலத்திற்கும் மேல் கார்ட்டூன்களைப் பார்ப்பது அவர்கள் நடத்தை கட்டுப்பாட்டை குறைக்கும், கோபம் மற்றும் பொறாமை போன்ற உணர்வுகளை அதிகரிக்கும்" என்கிறார்.

குழந்தைகள் கார்ட்டூன் பார்ப்பது உடல் இயக்கங்களையும் பாதிக்கக் கூடியது. அவர்கள் வெளியில் விளையாடுவதற்குப் பதிலாக திரைமுன் அமர்வதை வழக்கமாக்குகின்றனர். இதனால் உடல் பருமன், தூக்கக் கோளாறு, கண் பிரச்சனைகள் போன்ற உடல் நலப் பிரச்சினைகளும் உருவாகின்றன. இதேநேரம், சிறுவர்கள் காணும் கார்ட்டூன் கதைகளில் காணப்படும் காதல், நகைச்சுவை, கிண்டல், ஆபாசமான கூறுகள் கூட அவர்களின் மனப்பான்மையை தவறான வழிகளில் மாற்றுவதற்கும் வாய்ப்பளிக்கின்றன.

பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இதனை கவனிக்காமல் விட்டால் குழந்தைகள் கார்ட்டூன் உலகத்தில் இருந்து புறப்படும் சிந்தனை முறைதான் அவர்களின் நிஜ வாழ்க்கை நடத்தையாக மாறும் அபாயம் உள்ளது. பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் நடத்தை மாற்றத்தை "அவனும் ஷின்சானைப் போல பேசுகிறான்" அல்லது "அவள் எப்போதும் டோராவைப் போல பேசுகிறாள்" என்று நகைச்சுவையுடன் குறிப்பிடுகின்றனர். ஆனால் இதன் பின்னால் உள்ள மனநிலை விளைவுகள் தீவிரமானவை. சிறுவர்கள் கார்ட்டூன்களில் காணும் நகைச்சுவைச் செயல்களை சமூக ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகக் கருதி அதை பள்ளி, வீடு, நண்பர்கள் மத்தியில் பின்பற்றத் தொடங்குகின்றனர். இதனால் சில சமயங்களில் ஆசிரியர்களுக்கு மரியாதையின்மை, பெற்றோரிடம் எதிர்ப்பு மனப்பான்மை, நண்பர்களிடம் கொடுமை செய்யும் பழக்கம் போன்றவை உருவாகின்றன.

பல ஆய்வுகள் இதனை ஆதரிக்கின்றன. இந்தியாவில் நடைபெற்ற ஒரு ஆய்வில் 1000 சிறுவர்களில் 68% பேர் கார்ட்டூன்களில் காணப்படும் வன்முறையை ஏற்றுக்கொள்வதாகவும், 40மூ குழந்தைகள் கார்ட்டூன் கதாபாத்திரங்களின் சொற்பொழிவுகளை அன்றாட பேச்சில் பயன்படுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையிலும் இதே போன்று நிலை காணப்படுகிறது. குறிப்பாக நகர்ப்புறங்களில் மொபைல் போன்களின் வாயிலாக கார்ட்டூன்களை தொடர்ந்து பார்ப்பது சிறுவர்களின் சமூக பழகும் திறனை குறைத்து, தனிமை உணர்வை அதிகரிக்கிறது.

மேலும்,கார்ட்டூன்கள் சிறுவர்களின் மனதில் விதைக்கும் தாக்கங்கள் வெறும் நடத்தை மட்டுமல்லாது, அவர்களின் உணர்ச்சி, கனவு, எதிர்பார்ப்பு, சமூகச் சிந்தனை ஆகிய அனைத்தையும் வடிவமைக்கும் வலிமையான கலாச்சாரக் கூறுகளாகும். சமீபத்திய உலகளாவிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒரு குழந்தை தனது பத்து வயது வரையில் சராசரியாக 8,000 இற்கும் மேற்பட்ட கார்ட்டூன் அத்தியாயங்களை பார்ப்பதாகும். இதனால், அந்தக் குழந்தையின் வாழ்க்கை நோக்கம், நெறி உணர்வு, அன்பு உணர்ச்சி, கோபக் கட்டுப்பாடு போன்ற பல மனவள கூறுகள் கார்ட்டூன்களால் நுணுக்கமாகப் பாதிக்கப்படுகின்றன.

பல கார்ட்டூன்கள் நகைச்சுவையுடன் சிந்திக்க வைக்கும் அம்சங்களை வழங்கினாலும், அவற்றின் வெளிப்பாட்டு முறை குழந்தைகளின் உண்மைப் புரிதலைத் திரிப்பதற்கான வாய்ப்புகளை கொண்டுள்ளது. உதாரணமாக "Oggy and the Cockroaches" போன்ற கார்ட்டூன்களில் காணப்படும் முடிவில்லா துரத்தல், அடிதடி, ஒலி அலறல் போன்றவை சிறுவர்களை அதிர்ச்சியூட்டும் காட்சிகளுக்கு பழக்கப்படுத்துகின்றன. ஆரம்பத்தில் சிரிப்பைத் தரும் இந்த நிகழ்வுகள் நீண்டகாலத்தில் குழந்தைகளின் மனதில் வன்முறைக்கு எதிரான அருவருப்பு உணர்வை குறைத்து விடுகின்றன. இதை 'Desensitization Effect' எனப் பல மனவியல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது, ஒரு செயல் எவ்வளவு தீமையானதாக இருந்தாலும், அதை மீண்டும் மீண்டும் காணும்போது அதன் தாக்கம் குறைந்து சாதாரணமாக உணரப்படுவது.

மேலும், சில கார்ட்டூன்கள் பாலின அடிப்படையிலான தவறான சித்திரிப்புகளையும் பரப்புகின்றன. "Barbie", "Winx Club", "Frozen" போன்ற தொடர்கள் பெண்களை எப்போதும் அழகான உடை, முக அழகு, மின்னும் தோற்றம் ஆகியவற்றுடன் இணைக்கும் ஒரு கருத்தைச் செலுத்துகின்றன. இதனால் சிறுமிகள் தங்களது இயல்பான தோற்றத்தைப் பற்றி அதிருப்தியடையத் தொடங்குகின்றனர்.

மனநல மருத்துவர் டாக்டர் அனுஷ்யா பெர்னான்டோ கூறுவதாவது, "நான் பார்க்கும் 10 வயது சிறுமிகளில் பெரும்பாலானோர் தங்களை கார்ட்டூன் கதாபாத்திரங்களின் அழகுடன் ஒப்பிட்டு தாழ்வுணர்வை உணருகின்றனர்" என்பதாகும். அதேபோல் சிறுவர்கள் 'மஸ்குலார் ஹீரோஸ்' எனப்படும் சக்தி மிக்க ஆண் கதாபாத்திரங்களைப் பார்த்து தாங்களும் அதுபோல வலிமையானவர்களாக மாறவேண்டும் என்ற மன

தொடர்ச்சி...

# கார்ட்டூன்களின் வண்ண உலகம் சிறுவர் மனம் மாறும் நிஜ உலகம்!

தொடர்ச்சி...

அழுத்தத்தை உருவாக்கிக் கொள்கின்றனர்.

கார்ட்டூன்கள் குழந்தைகளின் சொற்தொகையையும் மொழிச் செயற்பாட்டையும் வடிவமைக்கின்றன. “Shinchan”, “Doraemon”, “Teen Titans Go!” போன்ற தொடர்களில் காணப்படும் சொற்பொழிவு முறை, நகைச்சுவைத் தாக்கங்கள், அதீத உச்சரிப்புகள் குழந்தைகளின் மொழி பழக்கங்களில் ஊடுருவுகின்றன. குறிப்பாக “Oh Mama!”, “No way!”, “You idiot!” போன்ற வெளிநாட்டு வார்த்தைகள் சிறுவர்களின் அன்றாட பேச்சில் இடம் பெற்றுள்ளன. இது ஒரு புறம் பன்னாட்டு ஊடகக் கலாச்சாரத்தை அறிமுகப் படுத்தினாலும், மறுபுறம் தமிழ், சிங்களம் போன்ற தாய்மொழிகளின் பண்பாட்டுத் தாக்கத்தைக் குறைக்கும் அபாயம் உண்டு.

இன்றைய சிறுவர்கள் கார்ட்டூன் உலகத்தில் நிஜத்தை மறந்து வாழும் மனநிலைக்குத் தள்ளப் படுகின்றனர். Minecraf, Pokémon", "Sonic " போன்ற கார்ட்டூன் விளையாட்டு இணைந்த உலகங்கள் அவர்களை மெய்நிகர் அடிமைத்தனத்துக்குத் தள்ளுகின்றன.

குழந்தைகள் தங்களது உண்மையான நண்பர்களை விட கார்ட்டூன் கதாபாத்திரங்களைத் தங்கள் ‘நண்பர்களாக’ கருதும் நிலையும் உருவாகியுள்ளது. இதனை மனவியல் அறிஞர்கள் “Parasocial Relationship” என்று குறிப்பிடுகின்றனர்.

அதாவது ஒருபுற உறவு, ஆனால் அந்த உறவில் குழந்தைகள் ஆழ்ந்த உணர்வை அனுபவிக்கின்றனர். இது உண்மையான சமூக உறவுகளைப் பழகும் திறனைச் சீர்குலைக்கும் ஒரு மெல்லிய ஆபத்து.

மிகச் சுவாரஸ்யமாகக் கூறப்படவேண்டியது – கார்ட்டூன்களின் பின்னணியில் இயங்கும் வணிகச் சக்திகள். சிறுவர்கள் ஒரு கார்ட்டூன் கதாபாத்திரத்தை விரும்பும் போது, அதனுடன் தொடர்புடைய விளம்பரப் பொருள்கள், ஆடைகள், பைய்கள், உணவுப் பொருள்கள் வரை சந்தையில் பரவி விடுகின்றன. இதனால் சிறுவர்கள் தங்கள்

விருப்பங்களை வணிகச் சுழலில் அடையாளப் படுத்துகின்றனர். “நான் ஸ்பைடர் மேன் வாட்ச் தான் போடுவேன்”, “நான் பிகாசு பாட்டில் தான் குடிப்பேன்” என்றே அவர்கள் தங்களை வெளிப்படுத்தத் தொடங்குகின்றனர். இதை பல சமூக ஆய்வாளர்கள் ‘Consumer Identity’ என வர்ணிக்கின்றனர் . குழந்தை தனது விருப்பத்தை கார்ட்டூன் கதாபாத்திரத்தின் மூலமே அடையாளப்படுத்துவது.

அதேசமயம் சில கார்ட்டூன்கள் சமூகப் பொறுப்புணர்வை உருவாக்கும் திறனையும் கொண்டுள்ளன. “Peppa Pig” குழந்தைகளுக்கு குடும்ப உறவு மற்றும் அன்பை கற்றுத்தருகிறது “Bluey” பெற்றோர்களுடன் கலந்துரையாடும் திறனை ஊக்குவிக்கிறது “Dora” கல்வி மற்றும் ஆர்வத்தை வளர்க்கிறது “Inside Out” போன்ற அனிமேஷன் திரைப்படங்கள் குழந்தைகளுக்கு உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளும் திறனை அளிக்கின்றன. இதனால் கார்ட்டூன்கள் முற்றிலும் எதிர்மறை அல்ல் அவற்றை எவ்வாறு நாம் பயன்படுத்துகிறோம் என்பதே முக்கியம். மருத்துவர்கள் பரிந்துரைக்கும் சில வழிமுறைகள் குறிப்பிடத்தக்கவை. கார்ட்டூன்களை தினமும் 30 முதல் 45 நிமிடங்களுக்கு மட்டுமே அனுமதிக்க வேண்டும். பெற்றோர் குழந்தையுடன் சேர்ந்து பார்ப்பது சிறந்தது. கார்ட்டூன் பார்த்த பிறகு அதன் பொருளை விளக்கி நல்லது கெட்டது பற்றிய உரையாடலை நடத்துவது மனநலத்துக்கு உதவுகிறது.

மேலும், வன்முறை, அவமதிப்பு, கிண்டல் சார்ந்த தொடர்களை தவிர்த்து கல்வி, அறிவியல், கற்பனை ஊக்குவிக்கும் கார்ட்டூன்களைத் தேர்ந்தெடுத்தல் நல்லது. சமூக வல்லுநர்கள் மேலும் வலியுறுத்துகின்றனர்: குழந்தைகள் கார்ட்டூன்களில் காணும் உண்மையற்ற உலகத்தை விமர்சனக் கோணத்தில் புரிந்துகொள்ளும் திறனை வளர்த்துக் கொடுக்க வேண்டும். அதாவது, “இது நிஜமல்ல, இது ஒரு கற்பனை கதை” என்ற புரிதல் அவர்களுக்கு சிறு வயதிலேயே ஏற்பட வேண்டும். இதற்கு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்புணர்வு மிக அவசியம்.

அவ்வாறு பார்த்தால், கார்ட்டூன்கள் சிறுவர்களுக்கு வெறும் சிரிப்பும் பொழுதுபோக்கும் அளிப்பதல்ல அவை அவர்களின் எதிர்கால மனிதர் உருவாக்கத்தின் அடிப்படை உந்துதல்களாக மாறுகின்றன. அதனால், “கார்ட்டூன்களின் வண்ணம்” குழந்தைகளின் வாழ்வில் நிழல் ஆகாமல் ஒளி ஆக மாற வேண்டுமானால், குடும்பம், கல்வி முறை, ஊடக அமைப்புகள் மூன்றும் இணைந்து செயல்பட வேண்டும். நம்முடைய அடுத்த தலைமுறை நிஜத்தையும் கற்பனையையும் சமநிலையில் புரிந்துகொள்ளும் திறனை வளர்த்தால் தான் கார்ட்டூன்களின் வண்ண உலகம் ஒரு அழகான கல்வி உலகமாக மாறும்.

இத்தகைய சூழலில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு எந்த வகையான கார்ட்டூன்களைப் பார்க்கலாம், எந்த அளவுக்கு பார்ப்பது சரியானது என்பதைக் குறித்த தெளிவான வழிகாட்டுதலை வழங்குவது அவசியமாகிறது. மனநல நிபுணர்கள் கூறுவதாவது, குழந்தைகள் கார்ட்டூன்களைப் பார்ப்பதற்கு முன் பெற்றோர்கள் அந்த தொடர்களின் உள்ளடக்கத்தை ஆராய்ந்து பார்த்து, அதில் காணப்படும் குணாதிசயங்கள் நேர்மறையானவையா என்பதைக் கவனிக்க வேண்டும். மேலும், கார்ட்டூன்களைப் பார்த்த பிறகு குழந்தைகளுடன் அந்த நிகழ்வுகளைப் பற்றி பேசுவதும் அவர்களின் புரிதலை சரியான பாதையில் நகர்த்த உதவும். இதனால் கார்ட்டூன்களின் எதிர்மறை தாக்கத்தை குறைத்து, நேர்மறை விளைவுகளை அதிகரிக்க முடியும்.

கார்ட்டூன்கள் சிறுவர்களின் மனதை கட்டுப்படுத்தக்கூடிய ஒரு வலிமையான ஊடகம் என்பதால் அதனை முழுமையாகத் தடை செய்வது தீர்வாகாது. மாறாக, அவற்றைக் கல்வி சார்ந்த கருவியாகப் பயன்படுத்துவது மிகப் பொருத்தமான வழியாகும். உலகம் முழுவதும் சில கல்வி நிறுவனங்கள் “Animated Learning” என்ற முறையை அறிமுகப்படுத்தியுள்ளன. அதாவது கற்பித்தல் கார்ட்டூன்களால் செய்யப்படும் வகையில். இது சிறுவர்களுக்கு விளையாட்டாக கற்றுக் கொடுக்க உதவுவதுடன், அவர்கள் மனநிலையை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் துணைபுரிகிறது.

அதனால், கார்ட்டூன்கள் சிறுவர்களின் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒன்று என்றாலும், அவை எந்த வகையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதைக் கவனித்துப் பயன்படுத்துவது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊடக அமைப்புகளின் பொறுப்பு.

கார்ட்டூன்களின் உலகம் நிறங்களாலும் கற்பனையாலும் நிரம்பியதாய் இருக்கலாம், ஆனால் அந்த உலகம் சிறுவர்களின் உண்மையான மனிதப்பண்புகளையும் சமூக ஒழுக்கத்தையும் மாற்றக்கூடியது என்பதை மறக்க முடியாது.

சரியான வழிநடத்தலுடன் கார்ட்டூன்கள் குழந்தைகளுக்கு அறிவும் சிந்தனையும் கொடுக்கக்கூடிய ஒரு அருமையான கல்வி வடிவமாக மாறலாம். தவறான வழிநடத்தலால் அது குழந்தைகளின் நடத்தை மற்றும் உணர்ச்சி வளர்ச்சியை சீர்குலைக்கக் கூடிய ஒரு மறைமுக ஆபத்தாகவும் மாறலாம். கார்ட்டூன்களின் வெளிச்சத்தில் விளையாடும் சிறுவர்கள் உண்மையான வாழ்க்கையிலும் ஒளிரும் வகையில் நாம் வழிகாட்டும் பொறுப்பை ஏற்கவேண்டும்.





# முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கு உபகரணம் கையளிப்பும் விழிப்புணர்வும்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிழக்கு மாகாண பாலர் பாடசாலை கல்வி அமைச்சின் கீழ் முன்பள்ளி பாடசாலைகளுக்கான உபகரணங்கள் கையளிப்பும் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வும் செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டு முன்பள்ளி பாடசாலைகளுக்கான ஒதுக்கீட்டு கடிதங்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முன் பள்ளி பாடசாலைகளின் தவிசாளர் அமினுதீன், அம்பாறை மாவட்ட முன்பள்ளி பாடசாலைகளின் பணிப்பாளர் நிசாந்த குமார, அதன் உத்தியோகத்தர்கள், அட்டாளைச்சேனை பிரதேச அமைப்பாளர், அதன் உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கில் பாதிக்கப்பட்ட 23,889  குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது!

## மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்தணசேகர தகவல்



(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் டித்வா புயல் மற்றும் மழை வெள்ளம் என்பவற்றால் வீடுகள் பாதிக்கப்பட்ட 23,889 குடும்பங்களுக்கு வீடுகளை சுத்தப்படுத்துவதற்கான கொடுப்பனவு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்தணசேகர ஊடகங்களுக்கு தகவல் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அதிகூடிய எண்ணிக்கையான 14070 குடும்பங்கள் திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 8,128 குடும்பங்கள், அம்பாறை மாவட்டத்தில் 1691 குடும்பங்களுக்கும்பாதிக்கப்பட்டுள்ளன. அதன்படி அம்பாறையில் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் முழுமையாக கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் பாதிக்கப்பட்ட 1873 குடும்பங்களுக்கும், மட்டக்களப்பில் 1121 குடும்பங்களுக்கும் நாளை 25 ஆயிர் ரூபா கொடுப்பனவு வழங்கப் படவுள்ளது.

இதுவரை மாகாணம் முழுவதிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் 92 வீத மானவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.- என்றார்.

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் முருகநாம பஜனை!







யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் இடம்பெறும் நிகழ்வு ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் முருகன் அடியார்களினால் "முருகநாம பஜனை" நிகழ்த்தப்பட்டது.

ஹார்மோனிய இசை - இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரன், தபேலா இசை-வித்துவான்மகேந்திரம்பிரபா, ஒக்ர பாட் இசை - வித்துவான் அ.கேதீஸ் ஆகியோர் வழங்கினர்.

இன்றைய இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளருக்கு இலங்கை அரச பொது சேவை சங்கம் கௌரவம்




(செல்லையா பேரின்பராசா )

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள இலங்கை நிர்வாகச் சேவையின் விசேட தர அதிகாரியான என். மணிவண்ணனை வாழ்த்தி இலங்கை அரச பொது சேவைகள் சங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளது.

இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தில் இடம் பெற்றது.

புதிய பிரதிப் பிரதம செயலாளரை வாழ்த்தி வரவேற்கும் முகமாக நேரடியாகச் சென்ற தொழிற்சங்க நிர்வாகியான இலங்கை அரச பொதுச் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ. சிபான் தலைமையிலான தொழிற்சங்க உறுப்பினர்களால் நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டது.

# டெங்கு ஒழிப்பு விசேட வேலைத் திட்டம்





(ஹஸ்பர் ஏ.எச்.)

அண்மையில்ஏற்பட்டவெள்ளஅனர்த்தம் மற்றும் கன மழையைத் தொடர்ந்து அதிகரித்துவரும் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் விஷேட வேலைத்திட்டம் கிண்ணியா நகரசபையின் தவிசாளர் எம்.எம். மஹ்தி தலைமையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் கிண்ணியா பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் ஏ.எம். எம்.அஜித், பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி, நகர சபை உறுப்பினர்கள், செயலாளர், கோட்டக்கல்வி அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வர்த்தக சங்கம், நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், டெங்கு கட்டுப்பாட்டாளர்கள் என பலர் பங்கு பற்றினர்.

கிண்ணியா பிரதான வீதி ஊடாக ஊர்வலமாக வந்து மக்கள் மத்தியில் டெங்கு ஒழிப்பு தொடர்பிலான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. அதிகமாக டெங்கு பரவும் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை பாரபட்சமின்றியும் எடுப்பதாக தவிசாளர் மக்கள் மத்தியில் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

# வெள்ளத்தைத் தொடர்ந்து உயிர்க்கொல்லியாக எலிக்காய்ச்சல்...!

இலங்கையில் ஏற்பட்ட வெள்ளத்தால் அதிகளவில் பாதக விளைவுகளை நாம் சுமக்க வேண்டியாயிற்று. அவற்றுள் ஒன்றாக தொற்று நோய்களைக் குறிப்பிடலாம். இந்தப் பேரிடர் காலத்தில் அதிகளவான இடங்களின் பேசுபொருளாக "எலிக்காய்ச்சல்" மாறிவிட்டது. பல இடங்களில் எலிக்காய்ச்சலுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. ஏனெனில் எலிக்காய்ச்சலால் உயிர் இழப்புகளும் கூட ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் எலிக்காய்ச்சல் என்பது குறித்த அடிப்படை விடயங்களை நாம் அறிந்திருப்பதானது எலிக்காச்சலில் இருந்து எம்மையும், எம் சார்ந்தவர்களையும் பாதுகாப்பதற்கு வழிப்படுத்தும் என்பதை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கட்டுரையானது வரையப்படுகிறது.

"எலிக்காய்ச்சல்" என்பது டநிவழளிசைய எனும் ஒருவகைப் பக்டீரியாவால் பரவப்படும் தொற்று நோயாகும். இதனை 'Leptospirosis' அல்லது 'Rat fever' எனவும் அழைப்பார்கள். இலங்கையில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதிக அளவில் ஏற்படும் தொற்று நோயாக இது காணப்படுகிறது. இது மட்டுமல்லாமல் ஏனைய பல தொற்று நோய்கள் இருந்தாலும் கூட எலிக்காய்ச்சலின் அளவுக்குத் தாக்கம் இருப்பதில்லை.

இத்தகைய எலிக்காய்ச்சலானது பரவுவதற்கு பிரதான காரணமாக எலியின் சிறுநீர் காணப்படுகிறது. இது தவிர வேறு வனவிலங்குகளின் சிறுநீரும் எலிக்காய்ச்சல் ஏற்பட வழி சமைக்கின்றன. Leptospira பக்டீரியா மாசுபட்ட நீர், மண்ணினாலும் இந்த எலிக்காய்ச்சல் பரவும். மேலும் தூய்மையற்ற வகையில் குப்பைகள் குவிந்து காணப்படும் இடங்கள், விலங்குகளுடன் மேற்கொள்ளும் பாதுகாப்பற்ற தொடுகை, தூய்மையற்ற குடிநீர் எனப் பல காரணங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். விரிவாக சொல்ல வேண்டுமென்றால் 'Leptospira' எனும் பக்டீரியாவால் மாசடைந்த நீரைப் பருகுதல், காயம் ஏற்பட்ட காலுடன் குறித்த பக்டீரியா கலந்த வெள்ள நீரில் நடத்தல், வெள்ள நீர் பட்ட உணவுப் பொருள்களை உண்ணுதல் போன்ற பல விடயங்களே எலிக்காய்ச்சல் பரவ ஆரம்பப் புள்ளியாகக் காணப்படுகின்றன.

இலங்கையின் தரைப்பரப்பில் 20மூ இற்கும் மேலானவை வெள்ள நீரால் மூடப்பட்டு விட்டன என ஐ.நா. சபை அறிக்கை கூறுகிறது. இவ்வாறு அதிகளவான இடங்களில் வெள்ளம் நிற்க சாதாரணமாக ஏற்படும் காய்ச்சலைக்கூட எலிக்காய்ச்சல் என எண்ணி அச்சம் கொள்பவர்களும் உள்ளனர். அதே நேரம் எலிகாய்ச்சல் ஏற்பட்டும் அதனை சாதாரண காய்ச்சலாக எண்ணி உயிர் விடுபவர்களும் உள்ளனர். ஆகையால் எலிக்காய்ச்சலின் அறிகுறியை நாம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். அதிகளவான காய்ச்சல், தலைவலி, கால்களில் ஏற்படும் மூட்டு மற்றும் தசை வலி (வேறு பாகங்களிலும் ஏற்படும்), வாந்தி, மயக்கம், சிவந்த கண்கள், இளஞ்சிவப்புத்தோல், சோர்வு, மனச்சுழற்சி, வயிற்று வலி, சிறுநீர் விடாமை, சிறுநீரில் வலி ஆகிய அறிகுறிகள் காணப்படும். இந்த அனைத்து அறிகுறிகளும் மட்டும் இருந்தால்தான் எலிக்காய்ச்சல் என கருத முடியாது.

சிலவேளைகளில் மேற்குறிப்பிட்ட அறிகுறிகளில் ஒன்று, இரண்டு அறிகுறிகள் இல்லாமலும் போகலாம். இத்தகைய அறிகுறிகள் நோய் தொற்று ஏற்பட்டு 5 முதல் 14 நாள்கள் வரையில் தோன்றும். தீவிரமாக உள்ளவர்களை மருத்துவ உதவிக்காக வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும். இல்லையேல் மூளைப் பாதிப்பு, நுரையீரல் இரத்தக்கசிவு, சிறுநீரக செயலிழப்பு போன்றன ஏற்பட்டு உயிரைக் காவு கொண்டுவிடும். ஆகவே இவ் அனர்த்த காலங்களில் தமக்கு ஏற்படும் காய்ச்சலை அலட்சியம் செய்யாமல் மருத்துவமனையை நாட வேண்டும்.

எலிக்காய்ச்சலால் உடலுறுப்பு செயலிழப்பு தொடக்கம் மரணம்வரை பல விளைவுகள் காணப்படுகின்றன. அந்த வகையில் சிறுநீரக செயலிழப்பு, கல்லீரல் சேதம், இதயம் மற்றும் மூளைப் பாதிப்பு, நுரையீரலில் இரத்தக் கசிவு இறுதியில் மரணம் வரை எலிக்காய்ச்சலின் அகோர விளைவுகள் காணப்படுகின்றன.

வெறுமனே நோயைப் பற்றி மாத்திரம் கூறுவதில் பயனில்லை ஆகவே இத்தகைய நோயிலிருந்து பாதுகாப்புப் பெற என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூற வேண்டும். இதற்குத் தீர்வாக இலகுவாக ஒரு வரியில் "சுத்தம் சுகம் தரும்" எனக் கூறிவிடலாம். ஆம்' தூய்மையைப் பேணுவதனூடாக மாத்திரமே இத்தகைய நோய் நம்மை அணுகாமல் பாதுகாக்கலாம். குறிப்பாக வெள்ள நீரில் அல்லது சேற்றில் வெறும் காலுடன் பாதுகாப்பில்லாமல் நடப்பதைத் தவிர்த்து பாதுகாப்பு உதிரிகளினை பாவிக்க வேண்டும், உடலில் காயங்கள் உள்ளவர்கள் வெள்ள நீர் காயத்தை அணுகாமல் பாதுகாக்க வேண்டும், சுத்தமான குடிநீரைப் பருக வேண்டும். முடிந்தால் கொதித்தாறிய குடி நீரைப்பருகலாம், வீட்டுச் சூழலின் சுத்தத்தில் கவனம் கொள்ள வேண்டும், சுத்தமான இடத்தில் தயாரிக்கப்பட்ட மூடிய உணவுகளை உண்ணுதல், நோய்த்தொற்று அறிகுறிகள் தொடர்பாக விழிப்புடன் செயற்படல், வைத்தியசாலை மற்றும் ஊடகங்களால் வெளியிடப்படும் நோய் தொடர்பான செய்திகளில் கரிசனை காட்ட வேண்டும். இவ்வாறாக செயற்படுவதனூடாக எலிக்காய்ச்சலில் இருந்து சமூகத்தை இலகுவாக மீட்கலாம்.

2025 ஆம் ஆண்டு இலங்கையில் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட எலிக்காய்ச்சலால் இதுவரை 14 பேர் உயிரிழந்துள்ளனர் என்ற விவரத்தைச் சுகாதாரத்துறை தெரியப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு குடிமகனும் தமக்கு ஏற்படும் காய்ச்சல் குறித்து அவதானமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கவேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு அலட்சியமும் நம்மை எலிக்காச்சலுக்குள் இழுத்து விடும் என்பதைக் கருத்தில் கொண்டு அவதானமாக இருப்போம் .



**பவித் அருள்வசந்,**
ஊடகக்ககற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# சாவகச்சேரிப் பிரதேச சபையின் உப பணிமனை சொந்த இடத்திலேயே அமைக்கப்பட வேண்டும்!

## பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் கோரிக்கை



(த.சுபேசன்)

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உபபணிமனை சொந்த இடத்தில் விரைவில் அமைக்கப்வேண்டும் என்று பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு வியாழக்கிழமை கொடிகாமத்தில்உள்ளபிரதேசசபையின்தலைமை பணிமனையில் நடைபெற்றது. இதன் போதே கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கைதடி வடக்கு வட்டாரத்தின் பிரதேச சபை உறுப்பினரான கதிர்காமன் சிவபாதம் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று இலங்கை தமிழரசு கட்சி ஆரம்பிக்கப்பட்டு 76 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இந்தப் பாதீட்டுக்கு எனது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் சபை ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரையான காலப் பகுதியில் பல கோரிக்கைகளும் பல பிரேரணைகளும் சபையில் முன்வைக்கப்பட்ட போதும், கோரிக்கைகள் மற்றும் பிரேரணைகள் செயல்படுத்தப்படாமல் காலநீடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இனியும் இவற்றை நாம் அனுமதிக்க முடியாது. இந்த நிலைமை தொடருமாக இருந்தால் மேலதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லவேண்டிய நிலைமை உருவாகும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் பிரேரணைகளாகச் சபை கூட்டத்துக்குச் சமர்ப்பித்த எந்த ஒரு பிரேரணையும் நிராகரிக்கப்பட்டதாக எனக்கு முத்துமூலம் தரப்படாத நிலையில், அவை கூட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்தது. பிரேரணைகள் கூட்ட அறிக்கைகளில் கோரிக்கைகளாக சுருக்கெழுத்து வடிவத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அவற்றை அறிக்கையில் மாற்றி அவை முழுமையான பிரேரணைகளாக பதிவுசெய்யப்பட வேண்டும்.

கைதடியிலிருந்து நிலத்தடிநீர் வணிக நோக்கத்துக்காக வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்வது முற்றாக தடைசெய்வது எனப் பிரதேச சபையில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானம் இன்றுவரை வர்த்தமானியில் பிரசுரிக்கவும், பத்திரிகைகளில் அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது தொடர்பான தீர்மானங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் கைதடி கிராம சபை இருந்த காணியில் அமைந்திருந்த கைதடி உப பணிமனை கட்டடம் சுண்ணக்கல் என்பதால் பழுதடைந்த நிலையில் பல ஆண்டுகளுக்கு முன்னராகவே அது அகற்றப்பட்டும் புதிய கட்டடம் அமைக்கப்படாமல் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியும் நிலையானவைப்பில்பலஆண்டுகளாகவைப்பிடப்பட்டுள்ளது. எனவே உடனடியாக புதிய கட்டடம் அமைக்கப்பட வேண்டும் என இந்த சபை அமைந்த முதலாவது கூட்டத்திலேயே கோரிக்கை முன்வைக்கப்பட்டு பின்னர் ஏகமனதான தீர்மானமாகவும் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆனால் இன்றுவரை அது செயல்படுத்தப்படவில்லை. உடனடியாக மேற்படி விடயங்களை இந்த ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் செயற்படுத்த வேண்டும் என மேலும் அவர் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

# பருத்தித்துறை வைத்தியசாலையில் மூடப்பட்ட நிலையில் உணவகம்!

## நோயாளர்கள் சிரமத்தில்

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில்உள்ளஉணவகம்தொடர்ந்தும் மூடப்பட்டிருப்பதால் நோயாளர்கள் உணவு மற்றும் சுடுநீர் பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வைத்தியசாலை உணவகம் கேள்வி கோரல் விடப்பட்ட நிலையில் அதிகூடியதொகைகேள்விகோரல்காரணமாக எவரும் உணவகத்தை எடுப்பதற்கு முன் வரவில்லை.

இதனால் உணவுச் சாலை மூன்று மாதமாக தொடர்ந்து மூடப்பட்டுள்ளது என்று நோயாளர்கள் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கேள்வி கோரல் மூலம் எவரும் உணவகத்தை எடுக்காத நிலையில் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் உணவுச்சாலையைநடத்தவேண்டும்அல்லது குறைந்த கேள்வி கோரலை கோரி மேற்படி உணவு சாலையை உடனடியாக திறப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கும் என நோயாளிகள் தரப்பில் அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வெள்ளத்தால் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு கைகொடுத்துள்ள புதிய வாழ்வு நிறுவனம்!





(பா. சதீசன்)

அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் தொடர்ச்சியான கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட முள்ளியவளை, குமுழமுனை கிராம மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இந்த நிலையை கருத்தில் கொண்டு புதியவாழ்வு நிறுவனத்தின் தலைவர் நாதன் கிறிஸ்ணன், மற்றும் அருண் இராசதுரையின் நிதிப் பங்களிப்பின் மூலம் பாதிக்கப்பட்ட 22 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர்உணவுப்பொதிகள்புதியவாழ்வுநிறுவனத்தின் தன்னார்வ தொண்டர்களால் இன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த ஒன்பது குடும்பங்களுக்கு நேற்று தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வரணியில் இளைஞர்களைத் தாக்கி மைதான உபகரணங்களுக்கும் சேதம்!

## விளைவித்த சந்தேகநபர் மீது பொலிஸ் முறைப்பாடு

(த.சுபேசன்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட வரணிப் பகுதியில் உள்ள யாழ். ஒளி மைதான உபகரணங்களுக்கு சேதம் விளைவித்து அங்கிருந்த இளைஞர்களைத் தாக்கி காயப்படுத்திய நபர் மீது கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் புதன்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மேற்படி சந்தேக நபர் மைதானத்தில் கூடிநின்ற இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தாக்கியதில் இருவர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேநேரம் மைதானத்தில் கட்டப்பட்டிருந்த கரப்பந்து விளையாட்டு உபகரணங்களையும் சேதப்படுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமத்தின் விளையாட்டுக் கழகம் மற்றும் இளைஞர் கழகத்தினரால் பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



# மண்ணின் மேல் ஓர் மௌனம்!

புகையால் மூடப்பட்ட வழிகள்,
படித்தவுடன் அடையப்படாத கனவுகள்.
தாயின் கண்ணீர்தான் இன்றைய உணவு,
குழந்தையின் சிற்றுண்டி மழையால் கரையும்!

சுவரில் மட்டுமே பெயர்கள் வாழ்கின்றன,
சாய்ந்த வீரர் உருவங்கள் வீதியில் இல்லை,
கல்லறைத் தூண்கள் பேசும் வரலாறு,
தூங்கும் நிலத்தின் கீழ் அடக்கம் உணர்வுகள்.

நீண்ட இரவுகளில் மௌனமே அரசன்,
கண்களில் பசி, விரலில் அடையாளச் சீட்டு.
மீன்கள் கூட மறுத்த கடலைக் கடக்க,
பறவைகள் தேசம் மறந்த பறக்கும் வேகம்.

இறந்ததோ சொந்தமனை, சொந்தமொழி
தொடர்கின்றன அச்சங்களின் மரபுக்கதை
தாய் மொழி துடிக்கிறது பறிக்கப்பட்ட பள்ளியில்,
சிறுவர் ஓவியத்தில் செருப்புச் சுவடுகள்.

நினைவேந்தல் தினம் மட்டும் காணப்படும் கொடி,
மீதமுள்ள நாள்களில் அது மவுன ஆவணம்
அழிவில் பிறந்த அறிவு,
நிழலில் வளர்ந்த நம்பிக்கை!

மண்ணுக்குள் புதைந்திருக்கும் எதிர்காலம்,
வேரோடு அறுப்பதா, மீண்டும் நடப்பதா?
ஈழம் ஒரு சொல் அல்ல
ஓர் உறவின் உச்சநிலை,
ஒரு அழகான மீள்பிறப்பு!



நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை
மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.



# மட்டக்களப்பில் டெங்கின் தாக்கம் அதிகரிப்பு அவதானமாக இருக்க மக்ளுக்கு அறிவுறுத்து

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் முரளீஸ்வரன் தெரிவிப்பு

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கின் தாக்கம் அதிகரிக்கும் நிலைமை காணப்படுவதால் மக்களை தமது சுற்றுச்சூழல்கள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் ஆர்.முரளீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான பாரிய டெங்கு ஒழிப்பு சிரமதான பணிகள் இன்று காலை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு வாவிக்கரை பூங்கா தொடக்கம் மட்டக்களப்பு கல்லடி பாலம் வரையிலான மூன்று கிலோமீற்றர் வடிகான்களையும் வீதியின் மருங்குகளையும் தூய்மைப்படுத்தும் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்,வீதி அபிவிருத்தி அதிகாரசபை,மட்டக்களப்பு மாநகரசபை,மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் இணைந்த இந்த சிரமதான பணியை முன்னெடுத்தனர்.

இதன் ஆரம்ப நிகழ்வானது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன், மாநகரசபையின் ஆணையாளர் என்.தனஞ்செயன், பிரதி ஆணையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் லிங்கேஸ்வரன், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.உதயகுமார், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த சிரமதான பணியில் மட்டக்களப்பு மாநகரசபையின் ஊழியர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிரமதான பணிகளை முன்னெடுத்தனர்.

இதன்போது வடிகான்கள் தூய்மைப்படுத்தப்பட்டதுடன் வடிகான்களுக்குள் தமது கழிவு நீரைவெளியேற்றுவோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. வீதிகளின் அருகில் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவான இடங்களும் தூய்மைப்படுத்தப்பட்டன. இந்த சிரமதான பணியின்போது வீதிகளில் காணப்பட்ட பெருமளவான கழிவுப் பொருள்களும் மாநகர சபையால் அகற்றப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த பணிப்பாளர் டாக்டர் ஆர்.முரளீஸ்வரன்,

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒவ்வொரு பருவகால மழை வீழ்ச்சிக்கு பிறகும் டெங்கு நோயாளர்கள் அதிகரித்து வருவதன் காரணத்தினால் நுளம்பு பெருகும் இடங்கள் ஒவ்வொரு ஆண்டும் சிரமதான பணிகள் மூலம் தூய்மைப் படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சுகாதார அலுவலக பிரிவுகளில் ஒவ்வொரு நாளும் நாளும் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றார்கள். இது அபகரிக்கின்ற அபாய நிலை காணப்படுகின்றது. மழைக்குப் பின்னர் இதன் அபாயத்தன்மை மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

மழைநீர் தேங்கி அதன்மூலம் டெங்கு நுளம்பு பெருகும் அபாயத்தைக் குறைக்கும் வகையில் இன்றைய நாளில் மட்டக்களப்பு மாநகரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அனைவரும் இணைந்து வடிகான்களை சுத்தப்படுத்தும் பணியை ஆரம்பித்திருக்கின்றோம்.

மிக முக்கியமாக பொது மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாக தேவைப்படுகின்றது. கொள்கலன்கலை வடிகான்களுக்குள் போடுவது மற்றும் வீட்டு சூழலை டெங்கு நுளம்புகள் பரவும் இடமாக வைத்திருப்பதை தவிர்த்து பொது மக்களின் ஒத்துழைப்பு முக்கியமாக தேவைப்படுகின்றது.

இந்த அந்த செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் பொதுமக்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்புத்தான் டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எங்களுக்கு உதவியாக அமையும்.

குடும்பத்தில் ஒருவர் வீட்டு சூழலை கண்காணித்து கொள்கலன் எதிலாவது நீர்நிரம்பியிருந்தால், நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் இருந்தால் தினமும் அவற்றைச் சுத்தப்படுத்தவேண்டும்.

இதேபோன்று அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்கள் சுற்றுச்சூழலிலும் நுளம்பு பரவாத வகையில் கண்காணிப்பதற்கான குழுக்களை அமைத்து தினமும் கண்காணிப்புகளை மேற்கொள்ளவேண்டும். இந்த வெள்ள அனர்த்த காலங்களிலும் பரவ மழைக்கு பின்னரும் முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டிய விடயம்.- என்று மேலும் தெரிவித்தார்.



# ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுகள் பூர்த்தியாகியும் வாக்குறுதியை நிறைவேற்றாத தி.மு.க அரசு

## அண்ணாமலை விமர்சனம்



ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுகள் முடியும் நேரத்திலும் தி.மு.க. அரசு, கொடுத்த வாக்குறுதியை இன்னும் நிறைவேற்ற வில்லை என பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தள பதிவில் அண்ணாமலை குறிப்பிடுகையில்,

" பணி நிரந்தரம் கோரி, போராட்டம் நடத்திய 1,500 இற்கும் மேற்பட்ட தாதி யர்களை, கைது செய்து, நள்ளிர வில் கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் கொண்டு போய் விட்டிருக்கிறது தி.மு.க அரசு.

இதனால், அதிகாலை நான்கு மணி வரை, கிளாம்பாக்கம் பஸ் நிலையத் தில், தாதியர்கள் தங்கள் போராட் டத்தை தொடர்ந் திருக்கிறார்கள். தி.மு.க. அரசின் இந்த அராஜகப் போக்கினை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தி.மு.க. தனது தேர்தல் அறிக்கை வாக்குறுதி எண் 356 இல், தமிழகம் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் பணி புரியும் மருத்துவர்களும், தாதியர்களும், பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று கூறியிருந்தது. ஆட்சிக்கு வந்து 5 ஆண்டு முடியப் போகும் நேரத்திலும், இந்த வாக்குறுதியை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கொரோனா காலத்தில், தங்கள் உயிரை பற்றிக் கூடக் கவலைப்படாமல், பொதுமக்கள் நலனுக்காக முன்னின்று பணியாற்றியவர்கள் மருத்துவர்களும், தாதியர்களும்தான். ஏற்கெனவே, 2023 ஆம் ஆண்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 2,472 தாதியர்களை பணிநீக்கம் செய்ததை கண்டித்துக் குரல் கொடுத்திருந்தோம்.

தமிழகம் முழுவதும் ஒப்பந்த அடிப் படையில் பணியாற்றும் தாதியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற தாதியர்களின் கோரிக்கைக்கு துணை நிற்போம். தாதியர்களுக்குக் கொடுத்த தேர்தல் வாக்குறுதியை தி.மு.க. நிறை வேற்ற வேண்டும் என்று வலியுறுத்து கிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# சபாநாயகரின் தேநீர் விருந்தில் பிரியங்கா காந்தி பங்கேற்றார்



நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் நேற்று முடிந்த பிறகு சபாநாய கர் ஓம் பிர்லா தேநீர் விருந்து அளித் தார். கடந்த முறை போலவே இந்த முறையும் தேநீர் விருந்தை எதிர்க் கட்சிகள் புறக்கணிக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது.

அதற்கேற்ப, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி இதில் பங்கேற்கவில்லை. நாடாளுமன்ற கூட்டத்தொடர் முடிவ தற்கு 2 நாள்களுக்கு முன்பே ராகுல் ஜேர்மனி சென்று விட்டார். ஆனால், யாரும் எதிர்பார்க்காத வகையில் பிரி யங்கா காந்தி உள்ளிட்ட பலர் தேநீர் விருந்தில் பங்கேற்றனர்.

விருந்துக்கு முன்னதாகவே வந்த பிரியங்கா, பிரதமர் மோடியுடன் சிரித் துப் பேசினார். காங்கிரஸ் எம்.பி.க்கள் குமாரி சைலஜா சிங், மாணிக்கம் தாகூர் மற்றும் முகமது ஜாவேத் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாநிலங்களவையில், கார்கே, சோனியா, திக்விஜய் சிங் மற்றும் ஜெய்ராம் ரமேஷ் ஆகியோர் பங்கேற்றனர்.

சோனியா உட்பட காங்கிரஸ் எம். பி.க்கள் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பி.க்களுடன் சிரித்து பேசி தேநீர் அருந்தினர். இந்தள வுக்கு ஆளும் கூட்டணி கட்சி – எதிர்க் கட்சி எம்.பி.க்கள் இணக்கமாக இருப்பார் கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

இதுகுறித்து காங்கிரஸ் எம்.பி.க்கள் வட்டாரம் கூறும்போது,

"மத்திய அரசின் மசோதாக்களுக்கு மக்களவையில் நாங்கள் எதிர்ப்பு தெரி வித்தோம். முந்தைய கூட்டத்தொடருடன் ஒப்பிடும் போது இந்த முறை அவையின் நிலைமை முற்றிலும் வித்தியாசமாக இருந்தது. எதிர்க்கட்சிகளுக்கும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன் விளைவாக, 2014-க்கு பிறகு கடந்த கால நாடாளு மன்றக் கூட்டத்தொடரின்போது காணப் பட்ட எதிர்க்கட்சிகளின் அதிருப்தி இந்த முறை காணவில்லை. இதனால், தேநீர் விருந்தில் பங்கேற்க கட்சித் தலைவர் கார்கே முடிவு செய்தார்" என்றன.

நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்கு இடையே, 3 நாடுகள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு டில்லி திரும்பிய பிரதமர் மோடியும் தேநீர் விருந்தில் கலந்து கொண்டார்.

# பிரபல மலையாள நடிகர் சீனிவாசன் காலமானார்



மலையாள திரையுலகில் நடிகர், இயக்குநர், திரைக்கதை ஆசிரியர், பின்னணி குரல் கலைஞர், தயாரிப் பாளர் என பன்முகத் திறனுக்காக அறியப்படும் சீனிவாசன் காலமானார். அவருக்கு வயது 69.

உடல் நலக்குறைவு காரணமாக அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார். டயாலிசிஸ் சிகிச்சைக் காக சென்ற போது அவரது உடல்நிலை மேலும் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து திருப்பூணித்துறை தாலுகா மருத்துவ மனையில் அவர் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டார். இந்நிலையில், இன்று காலை 8.30 மணி அளவில் அவர் உயி ரிழந்தார்.

கடந்த 1956, ஏப்ரல் 6 ஆம் திகதி கண்ணூர் மாவட்டத்தில் அவர் பிறந் தார். மலையாள சினிமாவில் சமூக நலன் சார்ந்த நகைச்சுவைக்காக பரவலாக அறியப்படுகிறார். சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலானது அவரது திரை பயணம். 225 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். காந்தி நகர் இரண்டாவது தெரு, பட்டணப்பிரவேசம், மிதுனம், கத பரயும்போல் உள்ளிட்ட படங்களுக்கு திரைக்கதை எழுதி உள்ளார்.

திரைப்படம் எழுதி இயக்கி உள்ளார். நடிப்பு, கதை, இயக்கம் என பல்வேறு விருதுகளை வென்றுள்ளார். இதில் தேசிய விருதும் அடங்கும். தமிழில் 'லேசா லேசா' படத்தில் நடித்துள்ளார். அவர் வழியில் அவரது மகன்கள் வினீத் சீனிவாசன் (ஹ்ருதயம் பட இயக்குநர்) மற்றும் தயான் சீனிவாசன் ஆகி-யோரும் திரை உலகில் பயணித்து வருகின்றனர். நடிகர் சீனிவாசனின் மறைவுக்கு திரை உலகினர் உட்பட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.





# பங்களாதேஷில் இந்து இளைஞரின் கொலை தொடர்பில் 7 பேர் கைது

பங்களாதேஷில் இந்து இளைஞரை அடித்துக்கொலை செய்த சம்பவம் தொடர்பாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்நாட்டின் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகம்மது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில்,

"மைமன்சிங் மாவட்டம் பலுகாவில் 27 வயது சனாதன இந்து தீபு சந்திர தாஸ் அடித்துக் கொல்லப்பட்ட வழக்கில், ராப்பிட் ஆக்ஷன் பட்டாலியன் (ஆர்.ஏ.பி) படையினர், சந்தேகத்தின் பேரில் 7 பேரை கைது செய்துள்ளனர். ஆர்.ஏ.பி வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, லிமோன் சர்க்கார் (வயது 19), தாரிக் ஹொசைன் (வயது 19), மாணிக் மியா (வயது 20), எர்ஷாத் அலி (வயது 39), நிஜ/ம் உத்தின் (வயது 20), அலோம்கிர் ஹொசைன் (வயது 38), மிராஜ் ஹொசைன் அகோன் (வயது 46) ஆகிய 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆர்.ஏ.பி. பல்வேறு இடங்களில் தேடுதல் வேட்டைகளை நடத்தி மேற்கூறிய சந்தேக நபர்களை கைது செய்துள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், மறைந்த மாணவர் தலைவர் ஷெரீப் உஸ்மான் ஹாடியின் இறுதிச் சடங்கு இன்று நடைபெற உள்ளது. இன்று பிற்பகல் இறுதிச் சடங்கு பிரார்த்தனை நடைபெற உள்ளது. நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள தெற்கு பிளாசா பகுதியில் முகம்மது யூனுஸ் தலைமையில் இந்த பிரார்த்தனை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஹாடி படித்த டாக்கா பல்கலைக்கழகத்துக்கு உடல் கொண்டு செல்லப்பட்டு அங்கு மற்றுமொரு பிரார்த்தனை நடைபெறும் என தகவல் வெளியாகி உள்ளது. பின்னர், பல்கலைக்கழக வளாகத்திலேயே அவரது உடலுக்கு இறுதிச் சடங்குகள் நடைபெறும் என உறுதிப்படுத்தப்படாத தகவல் வெளியாகி உள்ளது.




இதன் காரணமாக டாக்காவில் உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் அரசுக்கு எதிராக மாணவர் அமைப்புகள் கடந்த ஆண்டு நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதையடுத்து, பிரதமர் பதவியில் இருந்து விலகிய ஷேக் ஹசீனா, நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். இதை தொடர்ந்து, பொருளாதார நிபுணரான முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

பங்களாதேஷ் 2026 பெப்ரவரி 12 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், டாக்கா-8 தொகுதி வேட்பாளராக ஷெரீப் உஸ்மான் ஹாடி (வயது 32) என்ற மாணவர் தலைவர் களமிறங்கினார். இன்கிலாப் மஞ்சா என்ற மாணவர் போராட்டக் குழுவின் மூத்த தலைவரான இவர், கடந்த ஆண்டு மாணவர் போராட்டத்தை வழிநடத்திய முக்கிய தலைவர்களில் ஒருவர்.

இந்நிலையில், டாக்காவில் கடந்த 12 ஆம் திகதி பிரச்சாரத்தை தொடங்கிய இவரை, முகமூடி அணிந்த மர்ம நபர்கள், தலையில் சுட்டனர். இதில் படுகாயம் அடைந்த அவருக்கு டாக்காவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் முன்னேற்றம் இல்லாததால் கடந்த 13 ஆம் திகதி விமானம் மூலம் சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டு, அங்கு உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி ஷெரீப் உஸ்மான் ஹாடி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

இந்த தகவல் வெளியானதை அடுத்து, கொலையாளிகளைக் கைது செய்யக் கோரி டாக்கா உட்பட பல்வேறுபகுதிகளிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். பல பகுதிகளில் மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். 'புரோதோம் அலோ', 'டெய்லி ஸ்டார்' ஆகிய நாளிதழ் அலுவலகங்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. சட்டேகிராம் பகுதியில் உள்ள இந்திய துணைத் தூதரக அலுவலகம் மற்றும் இந்திய துணை தூதரின் வீடு மீது சிலர் கல்வீசித் தாக்கினர்.

இந்தியாவுக்கு எதிராகவும், அவாமி லீக் மற்றும் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராகவும் கோஷம் எழுப்பினர். பாதுகாப்புப் படையினர், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி, அவர்களை தடுத்து நிறுத்தினர். அவாமி லீக் கட்சிக்கு சொந்தமான இடங்கள் மீதும் மாணவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்துக்களை குறிவைத்தும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.



# அமெரிக்காவில் இடம்பெற்ற விமான விபத்தில் 7 பேர் பலி

அமெரிக்காவை ஸ்டேட்ஸ்வில்லி விமான நிலையத்திலிருந்து புளோரிடாவை நோக்கிப் பயணித்த சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில், 7 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவை சேர்ந்த முன்னாள் உந்துருளி பந்தய செம்பியன் கிரெக் பிபிளின் குடும்பத்தினர் உட்பட எழுவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விமானம் சுமார் 2,000 அடி உயரத்தை பயணித்து கொண்டிருந்த போது விமானத்தில் திடீரென ஏற்பட்ட கோளாறு காரணமாக அந்த விமானம் விமான நிலையத்திற்கு திரும்பியதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவசரமாகத் தரையிறங்க முயன்றபோது கட்டுப்பாட்டை இழந்த விமானம் ஓடுப்பாதையை தாண்டிச் சென்று சுற்றுச்சுவர் மீது மோதி பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இதில் பயங்கர தீவிபத்து ஏற்பட்டு விமானத்தில் பயணித்த 7 பேரும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கட்டுப்பாட்டை இழந்த விமானம் சுவரில் மோதி தீப்பிடித்ததில் 7 பேர் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



பக்கங்கள் - 03

# கனடா முரசு

சனிக்கிழமை 20/12/2025

## கார்பன் உமிழ்வு அளவு கனடாவில் அதிகரிப்பு



C3



# 19,000 புலம்பெயர்ந்தோரை நாடுகடத்தியது கனடா அரசு

2025 ஆம் ஆண்டில் 19,000 புலம்பெயர்ந்தோரை நாடுகடத்தியதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத நிலவரப்படி, 18,785 புலம்பெயர்ந்தோர் நாடு கடத்தப்பட்டனர் என கனடா எல்லை சேவைகள் ஏஜன்சியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கனடா அரசு நவம்பர் மற்றும் டிசம்பர் மாத எண்ணிக்கையையும் கணக்கில் சேர்த்தால், அந்த எண்ணிக்கை 18,969 ஐ தாண்டும் என கருதப்படுகிறது.

C2

# ஒன்டாரியோவின் லான்ஸ்டவுன் பகுதியில் தாயைக் கொன்ற குற்றச்சாட்டில் மகள் கைது







கொலை குற்றச்சாட்டில் கனடாவின் ஒன்டாரியோ மாநிலத்தில் உள்ள லான்ஸ்டவுன் பகுதியைச் சேர்ந்த 43 வயதான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை ஒன்டாரியோ மாகாண பொலிஸார் 73 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரின் உடலை மீட்டுள்ளனர்.

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட பெண்ணின் தாய் என்பதனை பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

உடற்கூறு ஆய்வின் மூலம் கொலை மரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொலைக்கான துல்லியமான காரணம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.



# ஒன்டாரியோ மாகாணத்தின் வெல்லாண்ட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் மீது துப்பாக்கிச் சூடு

கனடாவின் ஒன்டாரியோ மாகாணம் வெல்லாண்ட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

உத்தியோகத்தரின் காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை அல்ல என பொலிஸ் தெரிவித்துள்ளது. சம்பவம் செகண்ட் ஸ்ட்ரீட் பகுதியில், ப்ளைமவுத் ரோடு மற்றும் லிங்கன் ஸ்ட்ரீட் இடையே நடந்துள்ளது. துப்பாக்கிச் சூடு தகவல் கிடைத்ததும் பொலிஸார் சென்றபோது, அதிகாரி ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் வாழும் மக்களை பாதுகாப்பாக வீடுகளிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுற்றியுள்ள பகுதியில் 'உள்ளே தங்கியிருக்க' உத்தரவு அமுலில் உள்ளது. குடியிருப்பாளர்கள் அனைத்து கதவுகள் மற்றும் ஜன்னல்களை பூட்டி, உள்ளேயே இருக்க வேண்டும் போலீஸ் உத்தரவு வரும் வரை வெளியே வர வேண்டாம் என பொலிஸ் சமூக வலைதளத்தில் எச்சரித்துள்ளது.

இதேவேளை, பிரதமர் டக் ஃபோர்டு, பஃபலோவில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவித்தார்.

"மார்பில் சுடப்பட்ட பெண் அதிகாரி மருத்துவமனையில் உள்ளார். அவர் அற்புதமான நபர். அவர் உயிர் பிழைப்பார். குடும்பத்தினருக்கு எங்கள் பிரார்த்தனைகள்." எனக் கூறினார்.



**19,000 புலம்பெயர்ந்தோரை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2023 இல் கனடா 15,207 பேரையும், 2024 இல் 17,357 பேரையும் நாடுகடத்தியுள்ளது.

விடயம் என்னவென்றால், கனடாவின் கடுமையான விசா கட்டுப்பாடுகளால், கனடாவுக்கு சட்டப்படி வரும் வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை கணிசமாக குறைந்துவருகிறது.

ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி நிலவரப்படி, கனடாவின் மக்கள் தொகை 41,575,585 ஆக உள்ளது.

1971 ஆம் ஆண்டுக்குப் பின் தற்காலிக குடியிருப்போர் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது இப்போதுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கார்பன் உமிழ்வு அளவு கனடாவில் அதிகரிப்பு

மத்திய அரசின் 2030 ஆம் ஆண்டுக்கான உமிழ்வு மதிப்பீடு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட அதிகரித்துள்ளதாகக் கூறுகிறது.

கனடாவின் கார்பன் வாயு உமிழ்வு இலக்குகள் குறித்த முன்னேற்ற அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு அறிக்கையின்படி, அனைத்து திட்டமிடப்பட்ட மற்றும் அறிவிக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டால், 2030இல் கனடாவின் உமிழ்வு சுமார் 513 மில்லியன் டன்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 2030இல் கார்பன் விலையைடன்னுக்கு170டாலராகஉயர்த்தும் திட்டமும் அடங்கும். 2023ஆம் ஆண்டு மதிப்பீட்டில், அனைத்து முன்மொழியப்பட்ட விதிமுறைகளுடன் 2030இல் உமிழ்வு 467 மில்லியன் தொன்களாக இருக்கும் எனக் கூறப்பட்டிருந்தது.

சமீபத்திய மதிப்பீடு, எண்ணெய் மற்றும் எரிவாயு உமிழ்வு உச்சவரம்பை (எமிஷன்ஸ் கேப்) விலக்கியுள்ளது.

இது 2030இல் உமிழ்வை மேலும் 3 மில்லியன் டன்கள் குறைத்திருக்கும், ஆனால் ஒட்டாவா மற்றும் ஆல்பர்ட்டா இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இது செயல்படுத்தப்படாது.

பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தின் கீழ் கனடாவின் இலக்கு, 2005ஆம் ஆண்டு அளவைவிட 40 முதல் 45 சதவீதம் குறைத்து, 2030இல் உமிழ்வை 455 மில்லியன் தொன்களுக்கு மேல் அதிகரிக்காமல் வைத்திருப்பதாகும். இந்த அறிக்கை கனடாவின் காலநிலை இலக்குகளை அடைவதில் பின்னடைவை சுட்டிக்காட்டுவதாக உள்ளது.

# தீவிரவாத தொடர்பு குற்றச்சாட்டில் டொரொண்டோவில் இளைஞர் கைது



ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளுக்காக டொரொண்டோவைச் சேர்ந்த ஒரு இளைஞரை கனடா பொலிஸ் கைது செய்துள்ளது.

குற்றச்சாட்டுகளின்படி, இவ்வாண்டு ஜூன் 17 முதல் ஓகஸ்ட் 17 வரையிலான காலப்பகுதியில் இந்த குற்றங்கள் நடந்தன என கூறப்படுகிறது.

27 வயதுடைய டொரொண்டோவைச் சேர்ந்த வலீத் கான் என்பவரை நவம்பர் 26ஆம் திகதி பொலிஸார் கைது செய்தனர்.

இவர், டொரொண்டோ பொலிஸ் மற்றும் பீல் பிராந்திய பொலிஸ் நடத்திய கூட்டு விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று நபர்களில் ஒருவர் ஆவார்.

இந்த விசாரணை, வெறுப்பால் தூண்டப்பட்ட தீவிரவாதத்தால் ஏற்பட்டதாகக் கூறப்படும் பல்வேறு குற்றங்கள் தொடர்பானது.

இதில் பெண்கள் மற்றும் யூத சமூகத்தினரை இலக்காகக் கொண்ட குற்றங்கள் அடங்கும். குற்றச்சாட்டுகளில் கடத்தல், துப்பாக்கியுடன் கடத்தல் முயற்சி, பாலியல் தாக்குதல் செய்ய சதி, பிணைக் கைதி எடுத்தல் உள்ளிட்டவை அடங்கும் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

வலீத் கான் மீது டொரொண்டோ பொலிஸ் விசாரணை தொடர்பாக பல குற்றச்சாட்டுகள் உள்ளன.

பொலிஸ் விசாரணையில் 7 தீவிரவாத தொடர்புடைய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த கைது, சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸாரின் ஒருங்கிணைந்த முயற்சியின் விளைவாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.